**செ. கு. எண்**:461 **நாள்**:26.12.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.12.2012

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி கிராமம், செங்காட்டூர் பிரிவு ரோடு என்ற இடத்தில் உள்ள பட்டாசு குடோனில் 25.12.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் எட்டு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குளக்கட்டாக்குறிச்சி கிராமத்தில் செயல்பட்டு வந்த தனியார் தீப்பெட்டி தொழிற்சாலையில் 25.12.2012 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் குளக்கட்டாக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராஜம்மாள் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விரு விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விரு விபத்துகளில் 7 பேர் படுகாயமடைந்து மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட நிருவாகங்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விரு விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/– ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**